## இந்து சமயஅறநிலையத்துறை

## அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில்,

## சிங்கவரம், செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

விழுப்புரம் மாவட்டம், செஞ்சிவட்டம், சிங்கவரம்,அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் கீழ்க்காணும் விபரப்படியான கட்டுமான பணிக்கு தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறையில் பதிவுபெற்ற, முன் அனுபவம் வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்த புள்ளிகள் 19.04.2022 பிற்பகல் 01.30 மணி வரை இந்து சமய அறநிலையத்துறை, மேல்மலையனூர் மற்றும் வட்டம், அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில் உதவி ஆணையர்/செயல்அலுவலர் அலுவலகத்தில் வரவேற்கப்படுகிறது. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 18.04.2022 மாலை 5.45 மணி வரை மேல்மலையனூர் மற்றும் வட்டம், அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில் உதவி ஆணையர்/செயல்அலுவலர் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அதற்கான தொகையை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். மேலும், ஒப்பந்தபுள்ளி படிவங்களை www.tenders.tn.gov.in இணைய தளத்திலிருந்தும் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் 19.04.2022 பிற்பகல் 03.00 மணியளவில் வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் அறநிலையத்துறை அலுவலர்கள் முன்னிலையில் திறந்து பதிவு செய்யப்படும். இதர நிபந்தனைகளை திருக்கோயில் அலுவலகத்தில் நேரில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

<u>வேலைவிபரங்கள்</u>

| வ. எண் | வேலையின் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ. | முன் வைப்புத் தொகை ரூ. | டெண்டர் படிவம் GST 18% (ரூ. | முடிக்க வேண்டிய காலம் | ஒப்பந்ததாரர் தகுதி |
|---|---|---|---|---|---|---|
| 1. | திருக்கோயிலில் நடைபெரும் திருமணத்திற்கு வருகை தருபவர்கள் உட்கார்ந்து உணவு அருந்துவதற்கு மண்டபம்-I கட்டும் பணி | 64,66,078/- | 43,000/- | 15,000+ 2700 | 9 மாதம் | பொதுப்பணித் துறையில் பதிவுபெற்ற, முதல் மற்றும் இரண்டாம் வகுப்பு ஒப்பந்ததாரர்கள் |
| 2. | திருக்கோயிலில் நடைபெரும் திருமணத்திற்கு வருகை தருபவர்கள் உட்கார்ந்து உணவு அருந்துவதற்கு மண்டபம்-II கட்டும் பணி | 64,66,078/- | 43,000/- | 15,000+ 2700 | | |
| 3. | கழிவறை , குளியலறை மற்றும் உடைமாற்றும் அறை கட்டும் பணி | 70,29,892/- | 46,000/- | 15,000+ 2700 | | |

## நிபந்தனைகள்

1) ஒப்பந்தத்தில் கலந்துகொள்பவர்கள் வேலைக்கான முன் வைப்புத்தொகையினை இந்து சமய அறநிலையத்துறை, மேல்மலையனூர் மற்றும் வட்டம், அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில் உதவி ஆணையர் / செயல் அலுவலர் அலுவலகத்தில் செலுத்திய பின் தான் டெண்டர் படிவம் கொடுக்கப்படும்.
2) ஒப்பந்தத்தில் கலந்துகொள்பவர்கள், இப்பணியில் நன்கு அனுபவம் பெற்றவராக இருக்க வேண்டும்.
3) ஒப்பந்தத்தில் கலந்துகொள்பவர்கள் ஒப்பந்தபுள்ளி படிவத்தில் வேலை விபரத்தை கவனித்தும், ஸ்தலத்தினை நன்கு நேரில் பார்த்தும், இந்து சமய அறநிலையத்துறை, மேல்மலையனூர் மற்றும் வட்டம், அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில் உதவி ஆணையர் / செயல் அலுவலர் அலுவலகத்தில் மதிப்பீடு மற்றும் வரைபடத்தினை பார்த்தும், டெண்டர் நிபந்தனைகளை கேட்டுப்பெற்றுக்கொண்டும் ஒப்பந்தபுள்ளி போடுவதாகவே கருதப்படும்.
4) வேலைக்கான ஒப்பந்தபுள்ளியில் விலை விபரத்தினை இனம் வாரியாக எண்ணாலும் எழுத்தாலும் தனித்தனியே அடித்தல் திருத்தல் இன்றி குறிப்பிடவேண்டும். அவ்வாறு அடித்தல் திருத்தல் இருப்பின் சுருக்கொப்பம் இடப்படவேண்டும். குறைந்த தொகை குறிப்பிட்டுள்ள டெண்டரையே ஏற்றுக்கொள்ளப்படும். திருக்கோயில் நன்மையைக் கருதி, எந்த ஒரு டெண்டரையும் காரணம் கூறாமல் நிராகரிக்க அல்லது அங்கீகரிக்க இலாக்கா அலுவலருக்கு அதிகாரமுண்டு.
5) ஒப்பந்ததாரர் தளவாட சாமான்களை தமது பொறுப்பிலேயே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.
6) ஒப்பந்ததாரர் மதிப்பீடு பிளான்படியும், தமிழ்நாடு பில்டிங் பிராக்டிஸ் குறியீடுகளின்படியும்தான் வேலை செய்ய வேண்டும். அவ்விதம் செய்யத்தவறினால் அதனால் ஏற்படும் சகல நஷ்டங்களையும் ஒப்பந்ததாரர் ஈடு செய்து கொடுக்கவேண்டும். செய்யப்பட்ட வேலையினையும் அப்புறப்படுத்தப்படும்.
7) அங்கீகரிக்கப்பட்ட டெண்டர்தாரர் வேலைக்கான உத்திரவு வழங்கப்பட்ட ஒரு வாரகாலத்திற்குள் தனது செலவில் ஒப்பந்தபத்திரம் எழுதி கொடுத்து, கூடுதல் வைப்புத்தொகையினை செலுத்தியும் குறித்த காலத்தில் வேலையை முடிக்கவேண்டும். ஒப்பந்த காலத்திற்குள் பணியை முடிக்கத் தவறினாலோ (அ) தாமதமாக செய்தாலும் ஒப்பந்தப்படி அபராதம் விதிக்கப்படும்.
8) ஒப்பந்த படிவம் கோரி விண்ணப்பிக்கும்போதே அவ்வேலைக்கான முன்வைப்பு தொகையையும் செலுத்த வேண்டும். டெண்டர் கிடைக்காத டெண்டர்தாரர்களின் முன்வைப்புத் தொகை டெண்டர் அங்கீகரிக்கப்பட்டபின் வழங்கப்படும்.
9) செய்யப்பட்ட வேலைக்கு அவ்வப்போது இலாக்கா பொறியியல் துறையினர் அளவீடு செய்து சான்று செய்யப்படும் தொகையினையே வழங்கப்படும். அதன்படி வழங்கப்படும் தொகையில் GST 2 %, வருமானவரி 1 %, மற்றும் காப்பீடு தொகை 5% வருங்கால பிடித்தத்திற்கோ அல்லது அதிகமாக பணம் பெற்றிருந்தால் ஈடுசெய்வதற்கோ இறுதிப்பட்டியல் அங்கீகரிக்கப்படும் வரை வைத்து, பின்னரே திரும்ப அளிக்கப்படும்.
10) ஒப்பந்தப்புள்ளி ஒப்புதல் இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதாகும்.
11) வேலையின் போது தொழிலாளருக்கோ அல்லது பொருட்களுக்கோ நஷ்டம் ஏற்பட்டால் அதற்கு ஒப்பந்ததாரரே முழு பொறுப்பு ஏற்கவேண்டும். இன்சூரன்ஸ் செய்து கொள்ள வேண்டும்.

12) கட்டுமானபணி வேலையின்போது இந்து சமய அறநிலையத்துறை பொறியாளர்கள் மற்றும் ஆலோசனைக் குழுவின் ஆலோசனைபடியும் மற்றும் மேற்பார்வைக்கு உட்பட்டும் பணி செய்ய வேண்டும்.

13) டெண்டர்கள் யாவும் 19.04.2022 அன்று பிற்பகல் 1–30 மணிக்குள்ளாக திருக்கோயில் அலுவலகத்தில் அதற்கென நிறுவப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் சேர்ப்பிக்க வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட டெண்டர் படிவங்கள் உரிய நேரத்தில் கிடைக்கும் வகையில் தபால் மூலமும் அனுப்பி வைக்கலாம். குறிப்பிட்ட நேரத்திற்கு பின்னர் வரும் டெண்டர்கள் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

14) வரப்பெற்ற டெண்டர்கள் யாவும் 19.04.2022 அன்று பிற்பகல் 3–00 மணிக்கு இலாக்கா அலுவலர்கள் மற்றும் வருகை தந்துள்ள டெண்டர்தாரர்கள் முன்னிலையில் திறந்து அறிவிப்பு வெளியிடப்படும்.

15) டெண்டர்கள் வழங்க கருதும் ஒப்பந்ததாரர்கள் டெண்டர் ஷெட்யூல் வேண்டி விண்ணப்பிக்க வேண்டும். விண்ணபத்துடன் அரசு அங்கீகாரம் பெற்ற ஒப்பந்ததாரர்கள் என்பதற்கான பதிவு சான்று, வருமான வரி மற்றும் விற்பனை வரி சான்றுடனும் விண்ணப்பிக்க வேண்டும்.

16) டெண்டர்கள் அதற்குண்டான விண்ணபத்தில் மட்டுமே பூர்த்தி செய்து வழங்கப்பட வேண்டும். டெண்டர் ஷெட்யூல் பாரத்தின் கிரையம் பட்டியல் கண்டுள்ளவாறு திருக்கோயில் அலுவலகத்தில் ரொக்கமாக செலுத்தி நிர்வாக அதிகாரி கையொப்பமிட்ட டெண்டர் ஷெட்யூல் பாரத்தினை 11.04.2022 முதல் 18.04.2022 முடிய திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

17) டெண்டர் வழங்குபவர்கள் டெண்டருடன் அரசு பதிவு சான்று, விற்பனை வரி சான்று, வருமான வரி சான்று ஆகியவற்றுடன் டெண்டர் வழங்கப்படுதல் வேண்டும்.

18) டெண்டர்தாரர் பெயர் முகவரியினை தெளிவாக குறிப்பட்டு மூடி அரக்கு அடையாள முத்திரையிட்ட டெண்டர் வழங்க வேண்டும்.

19) டெண்டர் வழங்குபவர்கள் டெண்டர் உறையின் மீது வேலையின் விபரம் மற்றும் டெண்டர்தாரர் பெயர் முகவரியினை தெளிவாக குறிப்பிட்டு மூடி அரக்கு அடையாள முத்திரையிட்ட டெண்டர் வழங்க வேண்டும்.

20) டெண்டர் வழங்குபவர்கள் டெண்டர் ஷெட்யூல் கண்டுள்ள வேலை விபரத்தையும், வேலை நடைபெற உள்ள இடத்தினை பார்வையிட்டும் திருக்கோயில் அலுவலகத்தில் உள்ள வேலைக்கான வரைபடத்தினை பார்வையிட்டும் திருக்கோயில் நிபந்தனைகள் அனைத்தையும் கேட்டு தெரிந்துகொண்டும் அதன் பின்னரே டெண்டர் வழங்குவதாக கருதப்படும்.

21) டெண்டர் வழங்குபவர்கள் டெண்டர் ஷெட்யூல் படிவத்தில் டெண்டர் தொகை விபரத்தினை எண்ணாலும், எழுத்தாலும் அடித்தல் திருத்தல் இன்றி எழுத வேண்டும். அடித்தல் திருத்தல் இருப்பின் அவ்விடத்தில் டெண்டர்தாரர் கையொப்பம் இட வேண்டும். அதிகப்படியாக அடித்தல் திருத்தல் இருப்பின் டெண்டர் நிராகரிக்கப்படும்.

22) பொதுவாக குறைந்த தொகையாக உள்ள டெண்டரையே ஏற்றுக்கொள்ளப்படும். திருக்கோயில் நன்மையினை கருதி எந்த ஒரு டெண்டரையும் காரணம் கூறாமல் நிராகரிக்கவும் ஏற்றுக்கொள்ளவும் டெண்டர் தேதியினை வேறு தேதிக்கு மாற்றவும் திருக்கோயில் நிர்வாக அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

23) டெண்டர்தாரர் வழங்கியுள்ள ஒப்பந்த புள்ளியில் ஒவ்வொரு இனத்திற்கும் குறிப்பிட்டுள்ள விலைப்புள்ளி மிக மிக அதிகமாகவோ அல்லது மிக மிக குறைவாகவோ குறிப்பிட்டு இருந்தால் அந்த டெண்டர் நிராகரிக்கப்படும்.

24) டெண்டர் யாவும் இந்து சமய அறநிலையத்துறை சென்னை ஆணையர் அவர்களின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதாகும்.

25) ஏற்றுக்கொள்ளப்பட்ட டெண்டர்தாரர் வேலைக்கான ஆணை கிடைக்கப்பட்ட ஏழு தினத்திற்குள் ரூ.20/— மதிப்புள்ள இந்திய அரசு முத்திரைத்தாளில் ஒப்பந்த பத்திரம் எழுதி தாக்கல் செய்வதுடன் கூடுதல் காப்புத்தொகையான மேற்கண்ட வேவனித்தொகையினையும் அலுவலகத்தில் செலுத்தி அதன் பின்னரே வேலையினை துவங்க வேண்டும்.

26) ஏற்றுக்கொள்ளப்பட்ட டெண்டர்தாரர் செய்யும் வேலைக்குரிய பிளானுக்கு மாறாகவோ அல்லது டி.என்.சி.சி ஸ்பெசிபிகேஷனுக்கு மாறாகவோ இருந்தால் அவைகளின் படி மாற்றி டெண்டர்தாரர் தனது சொந்த செலவில் ஈடு செய்து கொடுக்க வேண்டும்.

27) ஏற்றுக்கொள்ளப்பட்ட டெண்டர்தாரர் மேற்கொள்ளும் கட்டுமான பணிகளை அவ்வப்போது இலாக்கா பொறியாளரால் அளவீடு செய்து அதனை இலாக்கா உதவி கோட்டப் பொறியாளர் மேலொப்பம் செய்த பின்னரே காசோலை மூலம் தொகை வழங்கப்படும். எக்காரணத்தை முன்னிட்டும் முன்பணங்கள் வழங்கப்படமாட்டாது.

28) டெண்டர்தாரர் செலுத்தியுள்ள டேவணித் தொகை மற்றும் கூடுதல் காப்புத்தொகை இக்கட்டுமான சம்மந்தமான கணக்குகள் மீதான தணிக்கை முடிந்து டெண்டர்தாரர் செய்துள்ள வேலையில் யாதொரு குறைபாடும் இல்லாத பட்சத்தில் காசோலை மூலம் திருப்பி வழங்கப்படும்.

29) ஏற்றுக்கொள்ளப்பட்ட டெண்டர்தாரர் மேற்கொள்ளும் கட்டுமான வேலை குறித்து டெண்டர்தாரருக்கும் திருக்கோயில் நிர்வாகத்திற்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டால் இந்து சமய அறநிலையத்துறையின் விழுப்புரம் இணை ஆணையர் மற்றும் சென்னை ஆணையர் அவர்களின் முடிவினை இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டு செயலாற்ற வேண்டும்.

30) ஏற்றுக்கொள்ளப்பட்ட டெண்டர்தாரர் தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள வேலைக்கான ஆணை கிடைக்கப்பெற்ற ஒரு மாத காலத்திற்குள் வேலையினை துவங்கி மேலே வரையறுக்கப்பட்டுள்ள காலவரையறைக்குள் பணியினை முடித்து ஒப்புவிக்க வேண்டும். பணியினை துவங்குவதற்கும் பணியினை நிறைவு செய்வதற்கும் காலதாமதம் ஏற்பட்டால் திருக்கோயில் நிர்வாகம் மேற்கொள்ளும் எந்த ஒரு நடவடிக்கைக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

31) ஏற்றுக்கொள்ளப்பட்ட டெண்டர்தாரர் நீங்கலாக இதர டெண்டர்தாரர்களின் டேவணித் தொகை டெண்டர் அங்கீகார ஆணைக்கு பின்னர் திரும்ப வழங்கப்படும்.

32) இதர நிபந்தனைகள் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கேட்டு தெரிந்துகொள்ளலாம்.

-----

**சி.க,அன்பழகன்,**
**தக்கார்/ஆய்வாளர்**

**திரு க.ராமு, பி,ஏ,பி,எல்,**
**உதவிஆணையர் /செயல்அலுவலர்**